**கவனிக்க.-** *2020.06.19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2182 - 2020 ජුනි මස 26 වැනි සිකුරාදා - 2020.06.26

*2182 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1032 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2020, யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, யூலை மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## மண்முனை பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உப பிரிவின் கீழ் விடுவிக்கப்படும் அறிவித்தல்*

*மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைப் பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள கீழே உப அட்டவணையில் விபரிக்கப்படும் காணி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் படியும் அதனோடு சேர்த்து வாசிக்கப்படக்கூடிய 57 ஆம் இலக்க 1946 ஆம் ஆண்டின் பொது, தனியார் மயானங்கள் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் விதியின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக மண்முனை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட அட்டவணை I, II, III இல் விபரிக்கப்படும் காணிகள் இறந்தவர்களின் பூதவுடல்களை புதைப்பதற்கும், தகனம் செய்வதற்குமான பொது மயானப் பிரதேசமாக பிரகடனப்பட்டுள்ளதாக மண்முனை பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதி மண்முனைப் பிரதேச சபை அமர்வின் தீர்மானம் 14 இன் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளமை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

சோ. மகேந்திரலிங்கம்,
தவிசாளர், B.com SLAcs,
மண்முனை பிரதேச சபை,
ஆரையம்பதி.

2020, மே 18.

### அட்டவணை I

*மண்முனைப் பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட செல்வநாகர் கிழக்கு 157B ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குட் பட்ட பகுதியில் அமைந்துள்ள காணி ஆரையம்பதி பொது மயான பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.*

| | | |
|---|---|---|
| இடம் அமைந்துள்ள மாவட்டம் | : | மட்டக்களப்பு |
| இடம் அமைந்துள்ள பிரதேச சபை | : | மண்முனை பிரதேச சபை |
| கிராம அலுவலர் பிரிவு | : | 157B |
| கிராமம் | : | செல்வாநகர் கிழக்கு |
| எல்லைகள் | : | வடக்கு : தீர்த்தக்கரை வீதி |
| | | கிழக்கு : கடற்கரை |
| | | தெற்கு : புர்ஹான் பள்ளி வீதி |
| | | மேற்கு : கர்ப்பலா, பாலமுனை வீதி |
| பரப்பளவு | : | 40 ஏக்கர் |

### அட்டவணை II

*மண்முனைப் பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட தாழங்குடா 153 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பிபிமட 228 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் காட்டப்பட்டுள்ள பின்வரும் எல்லைகளை உள்ளடக்கிய காணி தாழங்குடா பொது மயான பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.*

| | | |
|---|---|---|
| இடம் அமைந்துள்ள மாவட்டம் | : | மட்டக்களப்பு |
| இடம் அமைந்துள்ள பிரதேச சபை | : | மண்முனை பிரதேச சபை |

| | | |
|---|---|---|
| கிராம அலுவலர் பிரிவு | : | 153 |
| கிராமம் | : | செல்வாநகர் |
| எல்லைகள் | : | வடக்கு : TP109009 காணி |
| | | கிழக்கு : சங்குபதி இராஜதுரை (PP/மட/871) வரைபடம் 3 ஆம் இலக்கக் காணி துண்டு |
| | | தெற்கு : TP136710 காணி |
| | | மேற்கு : கல்முனை, மட்டக்களப்பு பிரதான வீதி. |

## உப அட்டவணை III

மண்முனைப் பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட வேடர்குடியிருப்பு 153B ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பிபிமட 2733 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் காட்டப்பட்டுள்ள பின்வரும் எல்லைகளை உள்ளடக்கிய காணி கோயிற்குளம் பொது மயான பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| இடம் அமைந்துள்ள மாவட்டம் | : | மட்டக்களப்பு |
| இடம் அமைந்துள்ள பிரதேச சபை | : | மண்முனை பிரதேச சபை |
| கிராம அலுவலர் பிரிவு | : | 153B |
| கிராமம் | : | வேடர்குடியிருப்பு |
| எல்லைகள் | : | வடக்கு : பிரதேச சபை வீதி |
| | | கிழக்கு : பிரதேச சபை வீதி |
| | | தெற்கு : சிறுணா காணித் துண்டு |
| | | மேற்கு : பிரதேச சபை வீதி. |
| பரப்பளவு | : | 5.5 ஏக்கர் |

06 – 97

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.